பூவலரயன் மால் காணாப்
பூரண புராணன் வந்தான்
யாவையும் படைப்பான் வந்தான்
ஆலவாய் அண்ணல் வந்தான்.

## பரதேசக் கோலம்

*தேவகாந்தாரி / ஆரபி* *ஆதி*

ப : பரதேசக் கோலம் வாரார் – பரமேசன்
பரதேசக் கோலம் வாரார்

அப : பரமதயாகரன் பக்தர்க்கனுகூலன்
பரிமளமான பல மலர்மாலைகளணிந்து (பர)

ச : அண்ட சராசரம் அனைத்தும் சந்தோஷிக்க
மண்டலாதீசர்கள் மகிழ்ந்துமே களிக்க
தொண்டர்கள் காக்ஷிகண்டு உள்ளம் பூரிக்க
குண்டோதரன் வெண் குடையினைப் பிடிக்க (பர)

2 : இனிமையாய் கீதங்கள் கின்னரர்பாட
இமையவர் ஏத்தியே மலர்மழை சொரிய
பனி மதி மான் மழு பணிகளை மறைத்து
பைம்பொன் ஆபரணம் பலவகை தரித்து (பர)

3 : அரியும் அயனும் ஹரன் கரங்களைத் தாங்க
சருகியே பல் கோடி கணங்களும் நெருங்க
பரிவுடன் காஞ்சனமாலை கண்டு களிக்க
பரமன் கன்னி தடாதகையை மணக்க (பர)

## மாலை மாற்றுதல்

மாலை சூட்டினாள் – மண மாலை சூட்டினாள்

ஓலை ஜிமிக்கி உடைமை அசைய
மாலை பதக்கம் மார்பில் அசைய
சேலையும் சிறு இடையும் அசைய
பாலை மீனாக்ஷி ஈசருக்கு (மாலை)

ஸாம கானம் உகந்தவர்க்கு பீமவிஷம் உண்டவர்க்கு
காமகோடி ஸுந்தரர்க்கு வாமபாகம் தந்தவர்க்கு (மாலை)

வந்த ஜனம் மனம் களிக்க வானவர்கள் மலர்கள் தூவ
மந்தஹாஸ வதனத்துடன் மங்கை மீனாக்ஷி தேவி (மாலை)

## கன்னூஞ்சல்

*ஆனந்தபைரவி* *ஆதி*

ப : கன்னூஞ்சல் ஆடினாள் – மீனாக்ஷி
காஞ்சனமாலை மனமகிழ்ந்திட இங்கு

அப : பொன்னூஞ்சலில் பூரித்து பூஷணங்கள் தரித்து
மின்னொளியாள் மீனாக்ஷி ஸுந்தரேசருடன் அமர்ந்து
(க)

ச1 : உத்தமி பெற்ற குமாரி நித்ய ஸர்வாலங்காரி
பக்தர் பாப ஸம்ஹாரி பத்மமுக ஒய்யாரி (க)

2 : சங்க துந்துபி முழங்க புங்கவர் புகழ்பாட
திங்கள் குலம் தழைக்க வந்த மீனாக்ஷி தேவி (க)

3 : மாலயன் தேவியர்கள் மகாதேவன் அடிகளை
பாலெடுத்து அலம்பியே பட்டாலே துடைத்தாரே (க)

4 : சீல மங்கையர் கூடி சிறந்த கீதங்கள் பாட
கோலாகலமாகவே ஆரத்தி எடுத்தாரே (க)

## கன்றூஞ்சல் 2

ப : கன்னூஞ்சல் ஆடினாள் – மீனாக்ஷி
காஞ்சனமாலை மனமகிழ (க)

அப : பொன்னார் மேனியனான தென்னாடுடைய சிவன்
தன்னோடு பொன்னூஞ்சலில் தடாதகை அமர்ந்து (க)

ச1 : அருமறைகள் துதிக்கும் அருகுண பூரணனை
திருமணம் புரிந்திடும் திரு நாளும் வந்ததென்று (க)

2 : இரு கண்களினின்றும் இன்பவெள்ளம் பெருக
திருமேனி அழகினில் திளைத்த உள்ளத்துடன் (க)

3 : திருமகள் ஸரஸ்வதி இருபுறம் நின்று ஆட்ட
அருந்ததி முதலானோர் ஆனந்த கீதம் பாட (க)

4. : அருந்தவப்பயனாக அம்பிகை மணம் காண
இருந்த ஜீவர்களின் இருவினை தீர்த்தருளி (க)

## கௌரி கல்யாணம்

கௌரி கல்யாணம் வைபவமே
மீனாக்ஷி கல்யாணம் வைபவமே

நல்முத்து மணிகளாம் தோரணம் தொங்க
நவரத்ன மண்டபம் நகரெங்கும் மின்ன (கௌ)

பூவோடு தண்பனி சிந்துவார் மாந்தர்
பொரியோடு பொற்சுண்ணம் வீசுவார் எங்கும் (கௌ)

குழைபனி நீரளை குங்குமக்குழம்பை
குவிமலை புதைபடப் பூசுவார் பெண்கள் (கௌ)

வேல்விழி வஞ்சியர் அஞ்சனம் தீட்டி
வேட்டதம் ஆடவர் மார்பிடை நாட்ட (கௌ)

யாழொடு விறலியர் இன்னிசை பாட
யாவரும் ஆனந்த வெள்ளத்தில் ஆழ (கௌ)

அழகான கால்களாம் அங்கங்கள் ஆறும்
ஆடும் சங்கிலிகளாம் அருமறை நான்கும் (கௌ)

ஓங்கார அக்ஷரம் உயர் தங்க பீடம்
உலகெலாம் உய்விக்கும் சிவசக்தியாட (கௌ)

## மீனாக்ஷீ கல்யாணம்

வானோர்கள் எல்லோரும் வாழ்த்தி மலர் தூவ
வர ச்ரேஷ்டர் ஸுந்தரர் மதுரை நகர் வந்தார்

மங்கள மூர்த்தியின் தரிசனம் கண்டு
சங்கர ஜய ஜய போற்றி என்றார்த்தார்

நம்பியை மணந்திட நங்கையோ நோற்றாள்
நங்கையை மணந்திட நம்பிதான் நோற்றான்

ஆலவாய் ஆற்றிய அருந்தவப் பயனோ!
அவனியில் அந்த நாள் வாழ்ந்தவர் தவமே!

# சூர்ணிகை

தத்ரகலு மதுராபுர்யாம் ஸகல ஸுர அஸுர முனிவர ஸித்த வித்யாதர யக்ஷ ராக்ஷஸ கருட கந்தர்வ கின்னர கிம்புருஷ யோகீந்த்ர நர ம்ருக பசு பக்ஷி ஸ்தாவர ஜங்கம பூலோகாதி ஸப்தஸாகர ஸப்த குலாசல ஸப்த த்வீப திவ்ய அந்தரிக்ஷ பூமி பாதாள அனந்தாதி அஷ்ட மஹா நாக நத்ய : நதாஸ்ச முனிப்ருந்த தேவப்ருந்த ஸகல தேசாதி பூபாலாதயஸ்ச

நந்தி ப்ருங்கீ நாரத தும்புரு வ்யாக்ரபாத பதஞ்சலீ பத்மஜ சங்க கர்ண கண்டா கர்ணாதி ப்ரமத கண சண்ட குண்டோதர ஸனகாதி ப்ரப்ருதயஸ்ச

ஸஹஸ்ர லோசனாऽலங்க்ருத சதமக சதுர்முக சக்ரபாண்யாதயஸ்ச சசீ வாணீ ரமா ஸதீ அருந்ததீ அனஸூயா லோபாமுத்ரா பதிபக்தியுத தேவ்யாதயஸ்ச

அஷ்ட மங்கள உபகரணை: ஸேவ்யமான ஊர்வசீ ப்ரமுக நிகில அப்ஸரோ கணாஸ்ச

ஸஹஸ்ர வதனேன சங்க மங்கள தேவ துந்துபி த்வன்யாதி அஷ்ட வாத்ய கோஷை: ஸஹ ஸ்ரீமத் தடாதகா—ஸுந்தரேச மங்களப்ரத உத்வாஹ தர்சனார்த்தம் பக்தி மந்த : ஸமாகதா:

ஸர்வேऽபி விஷ்ணு ப்ரப்ருதய: காஞ்சனமாலா—அனுமத்யா மஹாஸங்கல்ப பூர்வகம் மீனாக்ஷீ ஸுந்தரேச்வரயோ: பாணிக்ரஹண விதினா வைவாஹிக மஹோத்ஸவாய லக்னாஷ்டகம் ஆரபந்த

## வஸ்த்ரங்கள் சமர்ப்பித்தல்

சதாய ஸ்வாஹேத்யாஹ............................கல்யாண:

நவோ நவோ பவதி..............................கல்யாண:

# ப்ரவரம் 1

***அம்பாள் :***

மஹேச்வர பாண்ட்யஸ்ய நப்த்ரீம்
குலசேகர பாண்ட்யஸ்ய பௌத்ரீம்
மலயத்வஜ பாண்ட்யஸ்ய புத்ரீம்
மீனாக்ஷீ நாம்னீம் பராம் தேவதாம்

***ஸ்வாமி :***

ஸச்சிதானந்த பரப்ரம்ஹ ஸ்வரூபாய
பஞ்ச தத்வாதீத ஸதாசிவாய
மதுரா நகரீ விலஸத் லிங்க ஸ்வரூபாய
பகவதே ஸுந்தரேச்வராய வராய

# ப்ரவரம் 2

***அம்பாள் :***

சந்த்ர வம்ச குலசேகர பாண்ட்ய வர்மண: பௌத்ரீம் மலயத்வஜ பாண்ட்ய வர்மண: புத்ரீம்
உத்தரபல்குனீ நக்ஷத்ரே கன்யா ராசௌ சிதக்னி குண்டஸம்பூதாம் இமாம் கன்யாம் ஸங்கல்பதனயாம் மீனாக்ஷீ நாம்னீம்

***ஸ்வாமி :***

ஆதி மத்ய அந்த ரஹித ஸச்சிதானந்த பரப்ரம்ஹ ஸ்வரூபாய ஹிரண்ய வர்ணாய ஹிரண்யரூபாய ஹிரண்யபதயே பசுபதயே ஸோமஸுந்தரேச்வராய வ்ருணீமஹே

# கன்யாதானம்

கன்யாம் கனகஸம்பன்னாம் ஸர்வாபரண பூஷிதாம்
தாஸ்யாமி விஷ்ணவே துப்யம் ப்ரம்ஹலோக ஜிகீஷயா 11

இதி மந்த்ர அக்ஷத உதகதாரா ஸஹிதம் மீனாக்ஷீம் ஸ்ரீஸோம ஸுந்தரேச்வரஸ்ய கராரவிந்தே ஸமர்ப்பயாமாஸ 11

# மங்களாஷ்டகம்

1. விச்வேச : சசி ஸூர்ய மங்கள புதா:
 சுக்ரஸ் ததா கீஷ்பதி:
 ராஹு: கேதுயுத: சனைஸ்சரயுதா:
 ஸர்வே சுபஸ்தானகா:
 கோ பூ பூஸுர ரக்ஷணாய புவனம்
 ஸம்ப்ராப்தயோ: ஆப்தயோ:
 மீனாக்ஷீ ஹரயோ: விவாஹ ஸமயே
 குர்வந்துவாம் மங்களம்
 ஸுலக்னே ஸாவதான சுப முஹூர்த்தே ஸாவதான

2. கந்தர்வ அப்ஸர ஸித்த சாரண கணா:
 திவ்யாங்கனானாம் கணா:
 காயந்தோ திவிஜாத துந்துபிரவை:
 வீணாரவை: ஸம்யுதா:
 ந்ருத்யந்தோ லலிதம் மிதாக்ஷரபதை:
 ஸ்தோத்ரை: ஸ்துவந்தோ முதா
 மீனாக்ஷீ ஹரயோ: விவாஹஸமயே
 குர்வந்து வாம் மங்களம்
 ஸுலக்னே ஸாவதான சுபமுஹூர்த்தே ஸாவதான

3. இந்த்ரோ வன்ஹி: யமௌ ததா நிர்ருதி:
பாசீ மருத் யக்ஷராட்
ஈசான: ஸஹவாஹனை: ஸ்வரமணீ
யுக்தா நியுக்தாமயா:
பூபாராஸுர ராஜஸங்கதமனம்
கர்த்தும் தராம் ப்ராப்தயோ:
மீனாக்ஷீ ஹரயோ: விவாஹஸமயே
குர்வந்து வாம் மங்களம்
ஸுலக்னே ஸாவதான சுபமுஹூர்த்தே ஸாவதான

4. விஷ்ணு ப்ரம்ம ஸுராதிப ப்ரப்ருதய:
ஸ்வைர் ஸ்வைர்கணை: ஸம்யுதா:
நந்தீ பைரவ வீர பத்ர ஸஹிதா:
ஸர்வேடபி சர்வப்ரியா:
நாம்னா நாசயிதும் கலே: மலமலம்
லீலா தனும் ப்ராப்தயோ:
மீனாக்ஷீ ஹரயோ: விவாஹஸமயே
குர்வந்து வாம் மங்களம்
ஸுலக்னே ஸாவதான சுபமுஹூர்த்தே ஸாவதான

5. துர்வாஸ கௌசிக வஸிஷ்ட கச்யப:
ஸூதோ ததா அகஸ்தய:
தச்சிஷ்யா : ம்ருகண்டுஸூனு : கண்வ அத்ரி
கௌதம முனீனாம் கணா:
தான த்யான ஸமாதி ஸம்பவ பலம்
தாதும் தராம் ப்ராப்தயோ :
மீனாக்ஷீ ஹரயோ: விவாஹஸமயே
குர்வந்து வாம் மங்களம்
ஸுலக்னே ஸாவதான சுபமுஹூர்த்தே ஸாவதான

6. வாணீ ஸிந்துஸுதா கும்பஜஸதீ
சக்ரஸ்ய பத்னீ ததா
ஸாவித்ரீ துளஸீ விதேஹதனயா
ஸ்ரீமதி அருந்ததி அபி
பாதிவ்ரத்ய தப: பலம் ஸுலபதோ
தாதும் தராம் ப்ராப்தயோ :
மீனாக்ஷீ ஹரயோ: விவாஹஸமயே
குர்வந்து வாம் மங்களம்
ஸுலக்னே ஸாவதான சுபமுஹூர்த்தே ஸாவதான

7. கங்கா ஸூர்ய ஸுதா விரிஞ்சி மஹிஷீ
அந்தர்வஹா நர்மதா
தாபீ பாபவினாசினீ ச சுபதா
கோதாவரீ பாஹுதா
காவேரீ ப்ரமுகா: ஸ்வகீயச மலம்
த்யக்தும் (துக்தும்) தராம் ப்ராப்தயோ :
மீனாக்ஷீ ஹரயோ: விவாஹஸமயே
குர்வந்து வாம் மங்களம்
ஸுலக்னே ஸாவதான சுபமுஹூர்த்தே ஸாவதான

8. வ்யாஸ அங்கீரஸோ ததீசி பதஞ்ஜலி
சண்டேச குண்டோதர:
பாணோ ப்ருங்கிரிடிவிரோசன ஸுதோ
பக்தா: விரக்தாऽபி
தர்மம் பாசுபதம் கலௌ அதிஸுகம்
வக்தும் தராம் ப்ராப்தயோ :
மீனாக்ஷீ ஹரயோ: விவாஹஸமயே
குர்வந்து வாம் மங்களம்
ஸுலக்னே ஸாவதான சுபமுஹூர்த்தே ஸாவதான

## மாங்கல்ய தாரணம்

மாங்கல்யம் தந்துனானேன மம ஜீவன ஹேதுனா
கண்டே பத்னாமி ஸுபகே த்வம் ஜீவ சரதஸ்சதம்

(நைவேத்யம் கற்பூர ஹாரத்தி)

## விருத்தம்

ஆடினார் அரம்பை மாதர் விஞ்சையர் அமுத கீதம்
பாடினார் 'ஆ' வென்றார்த்துப் பாவினார் முனிவர் வானோர்
மூடினார் புளகப்போர்வை கணத்தவர் முடிமேற் செங்கை
சூடினார் பலரும் மன்றத் தொடு கடலின்பத்தாழ்ந்தார்
சுற்று நான் மறைகளார்ப்பத் தூரியஞ் சங்கம் ஏந்த
கற்ற நான்முகத்தோன் வேள்விச் சடங்கு நூல் கரைந்த வாற்றான்
முற்ற மங்கல நாண் சாத்தி முழுதுலகீன்றாள் செங்கை
பற்றினன் பற்றிலர்க்கே வீடருள் பரமயோகி!

## நாமாவளி

ஹாலாஸ்ய ஸுந்தரம் மீனாக்ஷி ஸுந்தரம்
கல்யாண ஸுந்தரம் கடம்பவன ஸுந்தரம்
அட்டாள ஸுந்தரம் அபிஷேக ஸுந்தரம்
கற்பூர ஸுந்தரம் கதம்பவன ஸுந்தரம்

கங்காதரஹர ஸாம்ப சிவ கௌரீரமண ஸதாசிவ
தேவ தேவ மஹாதேவ சிவ தேவி மீனாக்ஷீ ரமண சிவ

## அக்ஷதாரோபணம்

தேவ்யா: பாணி ஸரோருஹ அஞ்ஜலி கதா
 ரக்தாஸ்து முக்தாஸ்திதா:
யா முக்தா : கலிதானுராக விமலா:
 ஸோமோத்தமாங்க ச்ரயா :

யாதாஸ்தஸ்ய சிவோத்வஹஸ்ய பரமம்
ஸாம்யம் விசுத்தாத்மனா
தா: குர்வந்து அபித: சுபானி ஸததம்
ஸோமேச வைவாஹிகா:

## நாமாவளி

கல்யாண ஸுந்தர காருண்ய ஸாகர
மீனாக்ஷி ஸுந்தர பாஹி விபோ

## கல்யாண ஸுந்தர வைபவம்

ஸ்ரீமத் அகில ஜகதானந்தகாரக: பரமேச்வர: ஸனகாதி ரிஷி முனிவர பராயண: நிகில பக்த ஜன ஸம்ஸ்க்ருத அனுக்ரஹ அதி ஸௌந்தர்ய விக்ரஹ: விவித விசித்ர குணகணாதி விசேஷ: காஞ்சனமாலாயா: ப்ரார்த்தனான் ச்ருதவான் ஸ்ரீ தடாதக்யா: பாணிக்ரஹணம் க்ருதவான்

ஜகதாம் மங்களகர மாங்கல்ய ஸூத்ரம் “கண்டே பத்னாமி ஸுபகே” இதி த்ருதவான்
விஷ்ணு ப்ரும்மேந்த்ர ஸம்ஸ்துதவான்
அச்மாரோஹண லாஜ ஹோமாதி விதி மந்த்ர தந்த்ர விவித க்ரியா விசேஷ மஹத் ஆசீர்வாத ஸமன்வித :
ஸகல ச்ருதி ஸம்மத: ஸகுண நிர்குணாதீத:
ஸ்ரீ மீனாக்ஷீ ஸமேத: நவரத்ன வேதிகாயாம் ஸம்யக் விராஜதே

## நாமாவளி

கங்காதர ஹர கௌரீ ரமண
ம்ருகதர புரஹர மீனாக்ஷீ ரமண

## ஆனந்தம் ஆனந்தம்

ஆனந்தம் ஆனந்தம் ஆயனே – மன
ஸுந்தருடு பெண்ட்லி கொடுகாயனே – மன
மீனாக்ஷீ பெண்ட்லி கூதுராயனே
நானோமு பலமெல்ல நேடு ஸபல மாய (ஆ)

ஸனகாதி முனிஜனுலு வச்சிரி – வாரு
ஸர்வேச்வருனி வைபவமு ஜுசிரி
மிக்கிலி ஸந்தோஷமு பொந்தி
ஆனந்த ஸாகரமுன மக்னவைரி (ஆ)

காஞ்சனமாலா சிவ பூஜ ஜேஸனு
அதனிகி மீனாக்ஷினிப்ரேம தோனு தாரபோஸனு
ரத்னால தாலி பொட்டு
ரமணி கண்டமுன கட்டிரி (ஆ)

## புஷ்ப வர்ஷம்

*ஆனந்தபைரவி* *சாபு*

பூவுலு த்ஸஸ்லரே புவனேஸ்வருனிபை
பூ போனுலார மீரு–தேவ பாரிஜாத

வாலுகண்டி கௌரீ ஸஹிதுடைன ஸோமுடு
ஜாலிஜெந்தின பக்த வருலனு த்ஸால ப்ரீதிதோ ப்ரோது நம்ம (பூ)

பாலமார்கண்டுடுஜேயு பக்திகி ஸந்தோஷிம்சி
கால தர்முனி கொட்டிகாசே நீலகண்டுனி பை ஜாஜி (பூ)

ஸன்னுதிஞ்சு வாரி செல்ல தயதோனு பாலிம்ப
கன்ன தல்லி தண்ட்ரியகு மீனாக்ஷீசுனிபை தாமர (பூ)

ஸதாசிவ மீனாக்ஷீஸுடு ஸம்ப்ரமுதோனுன்னாடு
ஸதா தீனுல ப்ரோவுமனி ஸாலவேடரே மஞ்சி ஸம்பங்கி (பூ)

## கல்யாண தரங்கம்

மதுராக்யபுரே வர்யே மணிபூஷித மண்டபே
மீனாக்ஷி ஸஹிதம் பக்த்யா மஹாதேவம் ஜகு: ஸுரா:

*காம்போதி* *ஆதி*

ப : ஆலோகய மீனாக்ஷீசம் கல்யாண மூர்த்திம் – ஈசம்
கல்யாண மூர்த்திம் (ஆ)

அப : பால பாலம் அம்புஜாக்ஷம் பால சந்த்ர மௌலிதரம்
நீல கண்டம் நித்ய சுத்தம் புத்தம் தத்வதன ரூபம் (ஆ)

ச1 : ஸார மதுராபுர மண்டபே வாரிஜ மித்ர ஸன்னிபே
பூரிரத்ன ஸிம்ஹாஸனே பூஸுரகனே
வீராஸனே ஸுகாஸீனம் விஸ்வ மங்கள தாயினம்
தீர யோகி ஸேவ்யமானம் தேவ தேவம் மஹாதேவம்
(ஆ)

ச2 : அஷ்டபூதி ஸமன்விதம் அமர நாரிஸுஸேவிதம்
துஷ்ட புஷ்ட ஜனாவ்ருதம் தும்புரு கீதம்
இஷ்டஜன ஸமாச்ரிதம் ஈச்வரம் அபராஜிதம்
த்ருஷ்ட ஸர்வ லோக ஜாதம் தேவ ராஜாதி வினுதம்(ஆ)

ச3 : சங்க துந்துபி நாதிதே சதசோ கந்தர்வாதி கீதே
புங்கானு புங்க நிகம புத ஜனாவ்ருதே
பங்கஜேக்ஷண ரம்பாதி படுநடன வினோதிதே
குங்கும கேஸர வர்ஷிதே கோமள கந்தர சரிதே (ஆ)

ச4 : திவ்ய கிரீட குண்டலம் தீப்த பீதாம்பரம்
நவ்ய ருத்ராக்ஷாபரணம் நாநாலங்காரம்
அவ்யய பூதி விஸ்தாரம் அமர நாரீ ஸுராதாரம்
பவ்ய நீல கந்தரம் பக்த மானஸ ஸஞ்சாரம் (ஆ)

ச5 : ஹேம முக்தா மணிச் சத்ரம் ஹீர ரத்ன கடி ஸூத்ரம்
சாமர வ்யஜனா வ்ருதம் சரதிந்து வக்த்ரம்
காமகோடி ஸமகாத்ரம் கனகாங்கதாதி விசித்ரம்
ஸோமஸுந்தரம் பவித்ரம் சயத்ருத காஞ்சன கோத்ரம் (ஆ)

ச6 : நிகம கோசர நித்யம் நிரவதிக காருண்யம்
நிகிலலோக சரண்யம் நிர்மலாநந்தம்
விகளித மஹாமோஹம் விமல விக்ஞானரூபம்
அகணித குணஸம்பன்னம் அத்புதாநந்த ரூபம் (ஆ)

## நாமாவளி

நதஜன பாலகம் கௌரீசம்
நமாமி கல்யாண ஸுந்தரேசம்

## நலங்கு

கௌரீ கல்யாண வைபவமே
மீனாக்ஷி கல்யாண வைபவமே

நவரத்ன மண்டபத்தில் தோரணங்கள் மின்ன
நங்கை மீனாக்ஷி சோம சுந்தரேசருடன் (கௌரீ)

மலயத்வஜ பாண்டியன் மனமகிழ்ந்திடவே
மங்கை காஞ்சனமாலை மனங்குளிர்ந்தாள் (கௌரீ)

நந்தியுடன் சிவகணங்கள் நன்கு பூரிக்க
நாதனுடன் மீனாக்ஷி நன்கமர்ந்த கோலம்

அன்னை கயற்கண்ணியுடன் ஆலாலசுந்தரனை
அடிமை குருதாசன் இங்கு அடிபணிந்திடவே (கௌரீ)

## ஸ்ரீ க்ருஷ்ண ஜய ஜய

பொங்கரவைத் தானணியும் சங்கரனே மஹாதேவா
அங்கயற்கண் நங்கையுமை அன்புடனே நமஸ்கரித்தேன்
அன்னை வந்தி பிட்டுக்காய் அன்பாய் நீர் மண் சுமந்தீர்
மன்னன் கைப்பிரம்படியை மகிழ்வாக ஏற்றுக் கொண்டீர்
அமிழ்தினுமே இனிதான அருந்தமிழைக் காத்திடவே
தமிழ்ச்சங்கம் வளர்த்திட்ட தயாபரனே சுந்தரனே

வருந்தித்துடித்த பாண்டியனின் வயிற்றுப்பிணி நீங்கிடவே
மருந்தாக வந்தவனே மாமதுரை பரமேசா
திருவாதவூரருக்காய் நரியை எல்லாம் பரியாக்கி
திருவிளையாடல் செய்தவனே தென்மதுரைப் பதியழகா
பதஞ்சலியும் புலியும் காண பரிவாய் பொன்னம்பலத்தில்
பதம் உயர்த்தி ஆடியவா பன்னாகாபரண சிவா

ஜோதி வடிவானவனே சொக்கன் எனப் பெயர் கொண்ட
நாதனே நங்கை உமை நலங்கிடவே அழைக்கின்றேன்
நரியை எல்லாம் பரியாக்கி நாடகமும் ஆடியவா
பரமேசா குருதாசன் பணிகின்றேன் அருள்வாயே !

## ரா ரா ராஜகுமாரா

அழைப்பு

நலங்கிட வாரும் என் நாதா சுந்தரேசா
நான்மாடக்கூடல் நகரின் இறைவா வரவேணும்
அறுபத்து நான்கு திருஆடல்கள் காட்டி
அடியார்களை ஆட்கொண்ட ஆலால சுந்தரனே

## பீடம்

பொன்னான ஆசனத்தில் எழுந்தருளும் ஐயா
பொன்னம்பல வாணரே புரமெரித்த தேவா

## சந்தனம்

மலைமகள் தழுவும் திருமார்பா மஹாதேவா
மணக்கும் சந்தனம் பன்னீர் மார்பில் பூசிடுவேன்

## புஷ்பம், மாலை

கொன்றைத் தும்பை, அருகுடனே கொடி மலர்கள் சேர்த்து
நன்றாய் தொடுத்த மாலைகளை நானே சூட்டிடுவேன்

## திலகம்

நெற்றிக்கண் சுடர் வீசும் நீலகண்ட தேவா – உம்
நெற்றியில் திலகம் நான் நேர்த்தியாய் வைப்பேன்

## கண்ணாடி

சிரித்துப் புரமெரித்திட்ட செஞ்சடாதர ஹரனே
சிரிப்பைப் புன்முறுவல் ஆக்கி க்ஷேமம் எமக்கருள்வீர்
கண்ணப்பன் வழிபாட்டில் களிகொண்ட இறைவா
கண்ணாடியில் கருணைமுகம் காட்டி மகிழ்வீரே !

## கன்னத்தில்

பசுபதியாய் விளங்கும் பரமேச்வர ப்ரபுவே
பசுமஞ்சள் கன்னத்தில் பாங்காய்ப் பூசிடுவேன்

## பாதத்தில் நலங்கு

மார்க்கண்ட தேவருக்காய் மறலியை உதைத்த பாதம்
மங்கை சிவகாமியுடன் மன்றுள் ஆடிய பாதம்
தக்ஷயக்ஞ பூமியில் கோர தாண்டவமாடிய பாதம்
தாக்ஷாயணி வழிபட்ட தாமரைப்பாதம்
தில்லை மூவாயிரத்தோர் தினமும் போற்றும் பாதம்
பொல்லா முயலகனின் மேலே பதித்த பாதம்
கால் மாறி நடமாடிய கஞ்ச மலர்ப்பாதம்
மால் தேடிக் காணாத மகாதேவன் பாதம்

நடராஜன் திருவடியில் நலங்கிட்டு மகிழ்வேன்
இடர்யாவும் களைந்து இந்த ஏழையைக் காப்பாய்
அந்தரங்கம் அறிந்து எனை ஆட்கொண்ட தேவா – சோம
சுந்தர உன் திருவடியில் சொகுசாய் நலங்கிடுவேன்

## உப்பு

உப்பு நான் தருவேன் அய்யா பருப்பு நீர் தாரும்
உம் த்ருஷ்டி கழிய நான் சுற்றிப் போடுகிறேன்

## அப்பளம்

அன்பர்கள் துயர் அனைத்தும் அழித்துப் பொடியாக்க
அப்பளம் தட்டி உம்மை அன்பாய் வழிபடுவேன்

## பத்யம் - மீனாக்ஷீ சொல்வது

காஞ்சிமா நகரிலே காமாக்ஷி நாதனாய்
ப்ருத்வி வடிவான பரமேசா

அகிலாண்ட நாயகியின் அன்பனாய் அப்புவாய்
ஆனைக்கா ஆலயத்து தேவா

தேயுவாய் அருணையில் தரிசனம் தந்திடும்
தேவனே அருணாசலேசா

காற்றெனும் சக்தியாய் காள ஹஸ்தியிலே
காட்சிதரும் அய்யனே சம்போ

சிதாகாச ரூபியாய் சேவடி எடுத்தாடும்
சிற்றம்பலத்தானே சிவனே

ஆலகாலந்தனை நீ ஏற்றுக் கொண்டாய்
அடியார்கள் பலரை நீ ஆண்டு கொண்டாய்

ஆலவாய் அழகா எனை அடிமை கொண்டாய்
அன்புடனே என்னாளும் காத்திடவே வேணும்

## பத்யம் - இறைவன் சொல்வது

சீர்காழிப் பிள்ளைக்கு சிவ ஞானப் பால் ஊட்டி
சீரடியார் ஆக்கியவள் நீயே

அகிலத்தின் உயிர்க்கெல்லாம் அமுதூட்டும் அன்னை – ஜக
தம்பிகையாய் அமர்ந்தவளும் நீயே

சிவமென்ற ஒன்றுடனே சேர்ந்துலகை இயக்கிவரும்
சக்தியாம் மூலப்பொருள் நீயே

அருட்பார்வை ஒன்றாலே அனைத்துலகை ரட்சிக்கும்
அங்கயற்கண் பாவை நீயே

மலயத்வஜ பாண்டியனின் செல்வி நீயே
மாது காஞ்சனமாலை மகிழும் சேயே
மட்டிலா ஆனந்தம் தந்தாய் நீயே
மங்கையே எந்நாளும் உனை மறவேன்

## தாம்பூலம்

கற்பூர சுந்தரனாய் காட்சி தரும் தேவா
கற்பூர தாம்பூலம் சமர்ப்பித்து மகிழ்வேன்

## ஆரத்தி

ஆரத்தி சுற்றினேன் ஆலால சுந்தரனே
அன்பாய் ஏற்றுக் கொள்வீர் அரனே சங்கரனே

## நமஸ்காரம்

அபலை மீனாக்ஷி உம் திருவடிகள் பணிந்தேன்
விபவம் தந்தெனையாளும் சோம சுந்தரேசா
அரனே சூலகரனே தயாபரனே சங்கரனே – ஜடா
தரனே சோமசுந்தரனே உமக்கு கோடி நமஸ்காரம்

## மலர்ச்செண்டாடுதல்

ப : மலர்ச்செண்டு ஆடுகிறார்–மஹாதேவன்
மலர்ச்செண்டு ஆடுகிறார்

அப : அலர்விழியாள் அந்த அங்கயற்கண்ணியுடன்
அங்கார மண்டபத்தில் ஆலால சுந்தரர் (ம)

ச1 : கைலயங்கிரிவாஸன்–செஞ்சடையில்
கங்கையை சூடும் ஈசன்
மலயத்வஜன் ஈன்ற மங்கை மீனாக்ஷியுடன்
மங்கல வேளையில் மண்டபம் தனிலமர்ந்து (ம)

ச2 : அறுபத்து நான்கு திரு – விளையாடல் காட்டி
அடியாரை ஆட்கொண்டவன்
திருவடிபணிவோர்க்கு தேடிவந்தருள் செய்யும்
திரிபுரம் எரித்தவன் தேவி மீனாக்ஷியுடன் (ம)

ச3 : பற்பல மணமலர்கள்–கொய்து வந்து
பாங்குடன் தொடுத்து வைத்த
அற்புதமான அழகுச் செண்டெடுத்துப்
அம்பிகை பாகன் அவன் அன்னை மீனாக்ஷியுடன்

ச4 : சாக்கியன் வீசிட்ட – கல்லையெல்லாம்
சாற்றி மலராய்க் கொண்டான்
பாக்கள் பல தொடுத்துப் பாடும் குருதாஸன்
பாமாலைதனையேற்று பாலித்தருள் புரிவான் (ம)

## லாலி ஊஞ்சல்

வேதமிரண்டு இரண்டு நாற்கால்களாக
ஓதும் உபநிடதம் நாற்கயிர்களாக
நாதம் நிறை ஓங்காரமஞ்சமீது–கயிலை
நாதனவன் கௌரியுடன் ஆடும் ஊஞ்சல்

எண்ணடங்கா தேவர்மலர்மாரி பொழிய
அன்னநடை மாதர் வெண்கவரி வீச
மண்ணில் உள்ள தொண்டர்தம் மனகவலையோட–முக்
கண்ணனவன் தேவியுடன் ஆடும் ஊஞ்சல்

நாரதரும் தும்புருவும் நல்லிசை முழங்க
நந்திதேவர் நின்று மத்தளம் கொட்ட
அம்பலத்தில் திரு நடனம் ஆடினவன் இன்று
அங்கயற்கண்ணியுடன் ஆடும் ஊஞ்சல்

கரிமுகன் கணபதியும் அறுமுகவன் முருகனுமாய்
திருமகளும் கலைமகளும் தேவர் குழாம் முழுதும்
திருமலரடிகளையே தாங்கிப்பணிந்து நிற்க
பரமேசன் தேவியுடன் ஆடும் ஊஞ்சல்

தேவாரப் பண்ணிசைத்து தேவாதி தேவன் உன்னை
நாவாரப்பாடியவர் நல்லோர்கள் பலர் உண்டு
தேவாமுதம் விட்டு காலகூடம் ஏற்ற
தேவா மஹாதேவா குருதாஸன் உனைப் பணிந்தேன்

## பாலாலே கால் அலம்பி

கங்கைதவழ் காசியிலே கருணை விசாலாக்ஷியுடன்
தங்கியே முக்தியருள் தேவா விஸ்வ நாதா (லாலி)

அன்னை கற்பகவல்லி அருகிருந்தருள் புரிய
அழகார் திரு மயிலையிலே அமர்ந்திடும் கபாலி (லாலி)

கமலாலயக் கரையில் கமலாம்பிகையுடன் உறையும்
அமலா திருவாரூரா த்யாகேசப்பெருமானே (லாலி)

திரிசிரபுரத்தலத்தில் மட்டுவார் குழலியுடன்
தாயுமானவனாகத் தானமர்ந்த ஈசா (லாலி)

காமாக்ஷி அன்னையுடன் காஞ்சி மா நகர் தன்னில்
காட்சி தரும் ஏகாம்பரநாதனே சிவனே (லாலி)

இமயம் முதல் குமரிவரை எண்ணற்ற தலங்களிலே
உமையவளாம் சக்தியுடன் எழுந்தருளும் சிவனே (லாலி)

அங்கயற்கண்ணுமை மகிழும் ஆலால சுந்தரனே
சங்கரனே குருதாஸன் சரண மலர் பணிந்தேன் (லாலி)

## லாலி கருணாஸமுத்ர

லாலி பார்வதி நாயக –சங்கர
லாலி பாப வினாசக
லாலி கைலாஸ வாஸ–ம்ருகதர
லாலி உமா மஹேச

தாயன்பு வேண்டிநின்ற – செட்டிப்பெண்
தாபத்தைத் தீர்த்துவைக்க
தாயாகி மருத்துவம் செய்த – ஐயனே
தாயுமானவ தேவனே

அரசன் வியந்து காண–முழுநிலவை
அடிமைக்காய் தோற்றுவித்த
அபிராமி அன்னை மகிழும் நாதனே
அம்ருதகடேச ப்ரபுவே

சிவநேசச்செல்வர் பலர்–பக்தியுடன்
சிரம் தாழ்த்தி வணங்கிப் போற்ற
அவனியில் சிவாலயங்கள்–எங்கெங்கும்
அமர்ந்தருள் புரி சங்கரா

## ஓடம்

அருள்ஜோதி வடிவான அம்பலத்தீசா
ஆலவாய் அமர்ந்தருளும் ஸ்ரீசுந்தரேசா

இடை மருதுவாழ் மஹாலிங்கபரமேசா
ஈசனே ஆரூரின் விடங்க த்யாகேசா

உமையொரு பாகமுடை அர்த்தநாரீசா
ஊழி நடமாடிய ஒரு ருத்ர விச்வேசா

எல்லாமாய் அல்லதுமாய் இயங்குமொரு பொருளே
ஏகமாய் பலப்பலவாய் எங்கும் நிறைபொருளே

ஐம்பூதத் தலங்களிலே அமர்ந்த முதற்பொருளே
ஒப்பிலா மணியான ஓங்காரப்பொருளே

ஓதும் ஐந்தெழுத்தின் உள்ளிருக்கும் பொருளே
ஔஷதமாய் அருளமுது ஊட்டு மெய்பொருளே

குமரி முதல் கயிலைவரை குடி கொண்ட பொருளே
குறைவிலா நின்கருணை குவலயத்துக் கருளே

## முடுகு

சங்கரா கருணாகரா ஜகதீஸ்வரா பரமேஸ்வரா
சரணாகத பரிபாலக அருணாசல சுரஸேவித ஏலேலோ !

## ப்ரார்த்தனை

ஸம்ஸாராக்ய விசால நாடகக்ருஹே ஸர்வாணி ரூபாணி அஹோ
க்ருத்வாSதோமுக யோனிகா யவனிகாம் நிர்ஹத்ய நிர்கத்ய ச
ஸர்வக்ஞஸ்ய தயாகரஸ்ய தவ தேவாக்ரே சிரம் ந்ருத்யத:
ச்ராந்தஸ்வாபி மம அலம் இதி உசித வாக் ஏகாஸ்து விச்ரானனம்

வந்தே சம்பும் உமாபதிம் ஸுரகுரும் வந்தே ஜகத்காரணம்
வந்தே பன்னக பூஷணம் ம்ருகதரம் வந்தே பசூனாம் பதிம்
வந்தே சூர்ய சசாங்க வன்ஹிநயனம் வந்தே முகுந்தப்ரியம்
வந்தே பக்தஜன ஆச்ரயஞ்சவரதம் வந்தே சிவம் சங்கரம்

ஸாம்போ ந: குலதைவதம் பசுபதே ஸாம்ப த்வதீயா வயம்
ஸாம்பம் ஸ்தௌமி சுராசுரஉரககணா: ஸாம்பேன ஸந்தாரிதா:
ஸாம்பாயாஸ்து நமோ மயா விரசிதம் ஸாம்பாத்பரம் நோ பஜே
ஸாம்பஸ்யானுசரோமி அஹம் மம ரதி: ஸாம்பே பரப்ரம்ஹணி

ஸஹஸ்ரம் வர்தந்தே ஜகதி விபுதா: க்ஷுத்ர பலதா:
ந மன்யே ஸ்வப்னே வா ததனுஸரணம் தத்க்ருத பலம்
ஹரிப்ரம்ஹாதீனாமபி நிகட பாஜாம் அசுலபம்
சிரம் யாசே சம்போ சிவ தவ பதாம்போஜ பஜனம்

ஸாரூப்யம் தவபூஜனே சிவ மஹாதேவ இதி ஸங்கீர்த்தனே
ஸாமீப்யம் சிவ பக்தி துர்ய ஜனதா ஸாங்கத்ய ஸம்பாஷணே
ஸாலோக்யம் ச சராசராத்மக தனுத்யானே பவானீபதே
ஸாயுஜ்யம் மம ஸித்த மத்ர பவதி ஸ்வாமின் க்ருதார்த்தோஸ்மி அஹம்

மார்கா வர்த்தித பாதுகா பசுபதே: அங்கஸ்ய கூர்ச்சாயதே
கண்டுஷாம்பு நிஷேசனம் புரரிபோ: திவ்யாபிஷேகாயதே
கிஞ்சித் பக்ஷித மாம்ஸ சேஷகபலம் நவ்யோபஹாராயதே
பக்தி: கிம் ந கரோதி அஹோ வனசர: பக்தாவதம்ஸாயதே

மௌலௌ கங்கா சசாங்கௌ கரசரணதலே சீதளாங்கா: புஜங்கா:
வாமேபாகே தயார்த்ரா ஹிமகிரி தனயா சந்தனம் ஸர்வ காத்ரே
இத்தம் சீதம் ப்ரபூதம் தவ கனகஸபாநாத வோடும் க்வசக்தி:
சித்தே நிர்வேத தப்தே யதிபவதி ந தே நித்ய வாஸோ மதீயே

அங்கோலம் நிஜபீஜ ஸந்ததி: அயஸ்காந்தோபலம் ஸூசிகா
ஸாத்வீ நைஜவிபும் லதா க்ஷிதிருஹம் ஸிந்து: ஸரித்வல்லபம்
ப்ராப்னோதீஹ யதா ததா பசுபதே: பாதாரவிந்த த்வயம்
சேதோ வ்ருத்திருபேத்ய திஷ்டதி ஸதா ஸா பக்தி: இதி உச்யதே

த்வத் பாதாம்புஜம் அர்ச்சயாமி பரமம் த்வாம் சிந்தயாமி அன்வஹம்
த்வாம் ஈசம் சரணம் வ்ரஜாமி வசஸா த்வாமேவ யாசே விபோ
வீக்ஷாம் மே திச சாக்ஷுஷீம் ஸகருணாம் திவ்யைஸ்சிரம் ப்ரார்த்திதாம்
சம்போ லோக குரோ மதீய மனஸ: ஸௌக்யோபதேசம் குரு

## திருச்சிற்றம்பலம்

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்; வைகலும்
எண்ணில் ; நல்ல கதிக்கு யாதும் ஓர் குறைவு இலை
கண்ணில் நல்ல ஃதுறும் கழுமல வள நகர்ப்
பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே!

போதையார் பொன் கிண்ணத்து அடிசில் பொல்லாது எனத்
தாதையார் முனிவு உறத் தான் எனை ஆண்டவன்
காதையார் குழையினன் கழுமல வள நகர்ப்
பேதையாள் அவளொடும் பெருந்தகை இருந்ததே!

தொண்டு அணை செய் தொழில் துயர் அறுத்து உய்யலாம்
வண்டு அணை கொன்றையான் மதுமலர்ச் சடை முடி
கண் துணை நெற்றியான் கழுமலவள நகர்ப்
பெண் துணை ஆக ஓர் பெருந்தகை இருந்ததே!

“அயர்வு உளோம்” என்று நீ அசைவு ஒழிநெஞ்சமே
நியர் வளை முன் கையாள் நேரிழை அவளோடும்
கயல் வயல் குதி கொளும் கழுமலவளநகர்ப்
பெயர் பல துதி செய பெருந்தகை இருந்ததே!

“அடைவு இலோம்” என்று நீ அயர்வு ஒழி நெஞ்சமே
விடை அமர் கொடியினாள் விண்ணவர் தொழுது ஏத்தும்
கடை உயர் மாடம் ஆர் கழுமலவளநகர்ப்
பெடை நடை அவளொடும் பெருந்தகை இருந்ததே!

மற்று ஒரு பற்று இலை நெஞ்சமே ; மறை பல
கற்ற நல்வேதியர் கழுமலவளநகர்ச்
சிற்றிடைபேர் அல்குல் திருந்திழை அவளொடும்
பெற்று எனை ஆள் உடைப் பெருந்தகை இருந்ததே!

குறைவளைவதும் ஒழி குறைவு ஒழி, நெஞ்சமே
நிறைவளை முன் கையாள் நேரிழை அவளொடும்
கறை வளர் பொழில் அணி கழுமலவளநகர்ப்
பிறைவளர் சடை முடிப் பெருந்தகை இருந்ததே!

அரக்கனார், அருவரை எடுத்தவன் அலறிட
நெருக்கினார் விரலினால் நீடுயாழ் பாடவே
கருக்குவாள் அருள்செய்தான் கழுமல வளநகர்ப்
பெருக்கும் நீரவளொடும் பெருந்தகை இருந்ததே!

நெடியவன் பிரமனும் நினைப்பு அரிதாய், அவர்
அடியொடு  முடி அறியா அழல் உருவினன்
கடிகமழ்பொழில் அணி கழுமலவள நகர்ப்
பிடிநடை அவளொடும் பெருந்தகை இருந்ததே!

தார் உறுதட்டு உடைச் சமணர் சாக்கியர்கள் தம்
ஆர் உறுசொல் களைந்து அடி இணை அடைந்து உய்ம்மின்
கார் உறுபொழில் வளர் கழுமல வளநகர்ப்
பேர் அறந்தாளொடும் பெருந்தகை இருந்ததே!

கருந்தடம் தேன் மல்கு கழுமல வளநகர்ப்
பெருந்தடங் கொங்கையொடு இருந்த எம் பிரான் தனை
அருந்தமிழ் ஞான சம்பந்தன் செந்தமிழ்
விரும்புவார் அவர்கள் போய் விண்ணுலகு ஆள்வரே!

– திருச்சிற்றம்பலம் –

## நந்திகேசர்

*மத்யமாவதி* *ஆதி*

நந்திகேசம் பஜரே – ஹேமானஸ
நந்திகேசம் பஜரே

இந்துதர பாதாரவிந்த நிஹித சித்தம்
இந்துமுக விபுத வந்தித பதயுகம் (ந)

ஆகமமுக வித்ய புங்க நிகேதனம்
ராகத்வேஷ காமாதி நாக பக்ஷி நாயகம் (ந)

குண்டலி பூஷ கண மண்டல வர்ணன
பண்டித மகசய கண்டன தர்சனம் (ந)

காம தகன திவ்ய தாமர சிதவாஸம்
ராம கவி விநுத தாமரஸ சரணம் (ந)

## நாமாவளி

நந்திகேச மாம்பாஹி ப்ரமதப: ச்ரேஷ்ட மாம்பாஹி

## சண்டிகேசர்

*கல்யாணி* *சாபு*

சண்டிகேச்வரம் ஆச்ரயே –க்ருபாநிதிம்
பண்டித கணனுத பாவன ஸுசரிதம்

ஸைகத சிவலிங்கே க்ஷீராபிஷேக கரம்
சோக ஹரண தக்ஷ சிவநாமஜப ரதம் (ச)

சூலதர சரண சிந்தன ரத சித்தம்
பால நயன ஸேவா பலவிதரண தக்ஷம் (ச)

காமாதிரிபுகண குஞ்சரவர ஸிம்ஹம்
ராமகவிஸன்னுத ரமணீய குணஜாதம் (ச)

### நாமாவளி

சண்டிகேச மாம்பாஹி
ஸாம்பபக்த மாம்பாஹி

## மங்களம்

மங்களம் ஸ்ரீசுந்தரேசாய சூலினே
மங்களம் கல்யாண குணசாலினே
மங்களம் ஸனகாதி பக்தஜன பாலினே
மங்களம் ஸன்மித்ர வனமாலினே
ஜய மங்களம் நித்ய சுப மங்களம்
ரங்கசயனஸ்ய அந்தரங்காய வ்ருஷராட்
துரங்காய கரத்ருத குரங்காய ச
கங்கா விலஸத் உத்தமாங்காய பவபீதி
பங்காய பரமசுக பாக்யதாய
ஜய மங்களம் நித்ய சுப மங்களம்

## புண்டரீகங்கள்

நம: பார்வதீ பதயே – ஹரஹர மஹாதேவ
மஹா த்ரிபுர ஸுந்தரிக்கு – ஜய்
கஜானன மூர்த்திக்கு – ஜய்
வல்லீ தேவஸேனா காந்த ஸ்மரணம் – ஜய் ஜய் ஸுப்ரமண்யம்
ஜானகீ காந்த ஸ்மரணம் – ஜய் ஜய் ராம ராம
கோபிகா ஜீவன ஸ்மரணம் – கோவிந்தா கோவிந்தா
ஸத்குரு ஹரதத்த ஸ்வாமிகீ – ஜய்
நந்தீஸ சண்டீஸாதி சிவ பக்தாளுக்கு – ஜய்

மந்திமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்திரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருஆலவாயான் திரு நீறே

வேதத்தில் உள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந்தருவது நீறு பன்மை தவிர்ப்பது நீறு
ஓதத்தகுவது நீறு உண்மையில் உள்ளது நீறு
சீதப்புனல் வயல் சூழ்ந்த திரு ஆலவாயான் திருநீறே

இந்த பண்களைச் சொல்லி கொண்டு பக்தர்கள் அனைவரும் விபூதி, குங்குமம் தாரணம் செய்து கொள்ளவும்.

— சுபம் —

## நாமாவளிகள்

சிவ சிவ சம்போ மஹாதேவ கிரிஜா ரமண ஸதாசிவ

ஸாம்பம் வந்தே லோகேசம் கௌரீரமணம் தேவேசம்

பன்னக பூஷண பரமசிவ பார்வதீ ரமண ஸதாசிவ

சம்போ மஹாதேவ ஸாம்பஸதாசிவ
ஸாம்ப ஸதாசிவ சந்த்ரகலாதர
சந்த்ரகலாதர கங்கா ஜடாதரா
கங்கா ஜடாதரா கௌரீமனோஹர
கௌரீமனோஹர ஸாம்ப ஸதாசிவ

சிவ சிவ சிவ சிவ சிவாய நமஓம்
சிவாய நமஓம் ஹராய நமஓம்

பரமசிவம் பரமசிவம் பரமசிவம் பஜ பரமஸுகம்

ஸாம்ப மாம்பாஹி ஹரஹர சங்கர மாம்பாஹி

மஹாதேவ சம்போ சங்கர மஹாதேவ சம்போ

சிவாய பரமேச்வராய சசிசேகராய நம ஓம்
பவாய குணஸம்பவாய சிவ தாண்டவாய நம ஓம்

ஓம் நமசிவாய சிவாய நம ஓம்

சந்தரசூட சிவ சங்கர பாஹி
சம்போ கங்காதர ஸாம்ப ஸதாசிவ

– சுபம் –





ஸ்ரீமதி அன்னபூரணி ஸ்ரீ நாகராஜ சாஸ்த்ரிகள், தின்னியம்